பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 20 திங்கட்கிழமை 04.07.2022 கதிர் 241

### இது ரகசியம் அல்ல!

நமது நாட்டு விவசாயிகள் பாவம். அவர்களைப் பொறுத்த வரை 'கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்' என்ற நிலைமைதான்.

உர இறக்குமதிக்குத் தடை விதித்து நாட்டின் ☞2

# இதுவே போதும்; வெளியேறுங்கள்!

## அரசுக்கு சஜித் சாட்டை

கொழும்பு, ஜூலை 04

இந்த அரசாங்கத்தால் இனிமேலும் தொடர்ந்து நாட்டை முன் கொண்டு செல்ல முடியாது. எனவே இவ்வளவும் போதும். இத்தோடு வெளியேறுங்கள்!

– இவ்வாறு அரசையும் ஜனாதிபதியையும் கோரியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ. ☞2



## இந்திய மீனவர்கள் பன்னிருவர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 04

இலங்கைக்கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய மீனபிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேர் ஒரு படகுடன் பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து நேற்று மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீண்ட இடைவெளியின் பின்னர் தற்போது மீண்டும் இந்திய மீனவர் படகு பிடிக்கப்பட்டுள்ளது.

அது காங்கேசன்துறை துறைமுகம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் ☞2

## கடல் அலையில் சிக்கி யுவதி பலி

கொழும்பு, ஜூலை 04

பமுனுகம, உஸ்வெட்ட கெய்யாவ பிரதேசத்தில் கடல் அலையில் நடந்து சென்ற யுவதி ஒருவர் அலையில் சிக்கி கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற வைபவம் ஒன்றிற்காக ஏனைய நபர்களுடன் வந்த அவர், ஹோட்டலுக்குப் பின்புறமாக உள்ள கடற்கரையில் உலாவச் சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கடவத்த, பியன்வில பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சர்வ கட்சி அரசு வராவிடில் கலவரங்கள், களேபரங்கள்

### எச்சரிக்கின்றார் மைத்திரி



மகாசங்கத்தின் வழிகாட்டுதலின்படி கூடிய விரைவில் சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அமைக்கப்படாவிட்டால் இலங்கை கலவரங்கள் மற்றும் போராட்டங்களின் மையமாக இருக்கும் என்றும் ☞2

## இலங்கைக்கு நாணய நிதியம் நிபந்தனை விதிக்க வேண்டும்

### அமெரிக்கத் தரப்புக் கோருகின்றது

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியை பெற இலங்கை அரசாங்கத்துக்கு நிபந்தனை விதிக்க வேண்டும் என, வெளிநாட்டு உறவுகள் தொடர்பான அமெரிக்க செனட் குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் சுயாதீனம், ஊழலை ஒழிப்பதற்கு வலுவான நடவடிக்கைகள் எடுத்தல், சட்டத்தின் ஆட்சியை பாதுகாத்தல் என்பன பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரமே இலங்கையுடன் உடன்படிக்கைக்கு வர வேண்டும் என குறித்த குழு கேட்டுக்கொண்டுள்ளது.

மேற்படி குழுவின் ☞2

## மா ஏற்றி வந்த லொறி புரண்டது



ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியில் கோதுமை மாவை ஏற்றிவந்த லொறி ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகிப் புரண்டது.

கொழும்பு பகுதியில் இருந்து மட்டக்களப்பு நோக்கி கோதுமை மாவை ஏற்றிச் செல்லும் போது சாரதிக்கு ஏற்பட்ட தூக்கம் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்தது.

## அமெ. உதவி குறித்து விரைவில் அறிவிப்பு?

### பிளிங்கனும் வருகின்றார்



அமெரிக்க இராஜாங்க செயலர் (வெளிவிவகார அமைச்சர்) அண்டனி பிளிங்கன் இலங்கைக்கு வியஜம் மேற்கொள்ள உள்ளார்.

இந்த விஜயம் பெரும்பாலும் ☞2

## எரிபொருள் கப்பல்கள் இங்கு வருகின்றனவாம்!

ஜூலை மாதத்தில் இரண்டு டீசல் கப்பல்களையும் ஒரு பெற்றோல் கப்பலையும் கொண்டு வருவதற்கு ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், லங்கா ஐஓசி நிறுவனத்தின் ஊடாக மேலும் பல எரிபொருள் கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ளன.

அதன்படி முதற்கட்டமாக 40,000 மெட்ரிக் தொன் ☞2

# நாடு முற்றாக முடங்குகிறது

## வேறு வழி ஏதுமில்லை

அரசாங்கம் அதிகாரபூர்வமாக தீர்மானம் செய்யாவிட்டாலும், எரிபொருள் நெருக்கடி காரணமாக அடுத்த வாரம் நாடு மூடப்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் நெருக்கடியால் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள முடியாத அளவுக்கு நாட்டில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ☞2

## 6,400 லீற்றர் எரிபொருள் கிளிநொச்சி நகரில் மீட்பு



கிளிநொச்சி நகரை அண்மித்த நவபுரம் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 31 பரல்களில் டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சிநகருக்குள் சட்டத்துக்கு ☞2

## கேதீஸ்வரத்தில் எண்ணைக் காப்பு சிவன், நாவலர் சிலைகளும் திறப்பு



மன்னார் அருள்மிகு திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமைகாலை 7 மணியளவில் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு சிவசிறி தியாகராஜா கருணானந்த குருக்கள் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விவசாயத் துறைக்கே ஆப்பு வைத்தார் நமது ஜனாதிபதி. அவர் பட்டுத் தெளிந்து, கையைச் சுட்டுக் கொண்ட பின்னர் உர இறக்குமதி மீதான தடையை இப்போது நீக்கி விட்டார்.

உர இறக்குமதிக்குத் தடையை நீக்கி விட்டார்கள், ஆனால் இறக்குமதிக்குத் தேவையான அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை.

அதனால் முன்னர் சில ஆயிரம் ரூபாவுக்கு விற்ற 50 கிலோ உர மூடையின் விலை இப்போது 43 ஆயிரம் ரூபா.

ஏதோ இழுத்துப் பறித்து இந்தியாவின் கடன் உதவி திட்டத்தின் கீழ் 65,000 மெற்றிக் தொன் உரம் இவ்வாரத்தில் கொழும்பு வந்து சேருகிறது. இந்திய எக்ஸிம் வங்கியிலிருந்து இந்திய அரசு மூலம் கிடைத்த ஐந்து கோடி அறுபது லட்சம் டொலர் கடனில் இந்த உரம் கொள்வனவு செய்யப்பட்டு, ஓமானிலிருந்து இருந்து கப்பல் புறப்பட்டு விட்டது. பெரும்பாலும் 10 ஆம் தேதி அளவில் கப்பல் வந்து சேர்ந்து விடும். கப்பல் வந்தாலும் அந்த உரத்தை உடனடியாக நாட்டின் நாலாபுறமும் உள்ள விவசாய நிலங்களுக்கு கொண்டு போய்ச் சேர்ப்பது பெரும்பாடாக இருக்கப்போகிறது.

ஏற்கனவே சிறு போகத்திற்கு உரம் தாமதமாகிவிட்டது. இப்போது வந்திறங்கும் உரத்தை கடுகதி வேகத்தில் ஏற்றி விவசாய நிலங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தால்தான் இறுதிக் கட்டத்திலாவது அவை பயன் தரும்.

இப்போது வெளிச்சந்தையில் 43 ஆயிரம் ரூபா விற்கும் ஐம்பது கிலோ உர மூடையை சுமார் 15 ஆயிரம் ரூபாப்படி விவசாயிகளுக்கு விநியோகிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஆனால் இந்த உரத்தை அந்தந்த இடங்களுக்கு எடுத்துச் சென்று சேர்ப்பிப்பதற்கான போக்குவரத்து வசதி இருக்குமா என்பதுதான் கேள்வி.

இந்த உரத்தை கப்பலில் இருந்து இறக்கிய கையோடு, உரிய இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்காக 2,000 லொறிகளை தயார் செய்து வைத்திருக்கிறார் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர. ஆனால் இந்த 2,000 லொறிகளுக்குமான டீசல் கிடைக்குமா என்பதே கேள்வி.

இதற்கிடையில் அரசாங்கம் உர உதவி வழங்கும் என்று அளித்த நம்பிக்கையின் அடிப்படையில் முன்னர் இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ஹெக்டரில் விவசாயம் செய்ய முற்பட்ட விவசாயிகள் இப்போது நான்கு லட்சத்து 75 ஆயிரம் ஹெக்டரில் செய்கிறார்கள்.

இவற்றுக்கு உரங்களை எடுத்துச் செல்லவும், அறுவடை வேலைகளைக் கவனிக்கவும், அறுவடை செய்த விளைச்சலை களஞ்சியங்களுக்குக் கொண்டு போய் சேர்ப்பதற்கும் 2 கோடி லீற்றர் டீசல் தேவை, அதை ஒடுக்கீடு செய்யுங்கள் என்று இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர் மஹிந்த அமரவீர எழுத்து மூலம் அறிவித்திருக்கிறார்.

இவையெல்லாம் நடக்கும் விடயங்கள் போல் தெரியவில்லை. விதைப்பதற்கு உரமில்லை. உரம் வந்தாலும், அதைக் கப்பலில் இருந்து இறக்கி உரிய வயல்களுக்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கு டீசல் இல்லை.

சரி. இரண்டையும் கண்டுபிடித்து விளைச்சலை மேற்கொண்டால், விளைந்த விளைச்சலை அரிவு வெட்டுவதற்கும், நெல் மணியாக்கி மூடைகளில் கட்டி, களஞ்சியங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கும் டீசல் கிடைக்குமா என்பது சந்தேகமே. விவசாயிகளைப் பொறுத்தவரை 'கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் காணோம்' என்ற நிலைதான் இங்கு!

★ ★ ★

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனோடு ஒப்பிட்டு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க கருத்து வெளியிட்டிருக்கிறார். இது ஒரு வித்தியாசமான அளவீடு அல்லது ஒப்பிடல்.

கொழும்பில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இப்படிக் கூறினார்:-

"இலங்கையின் பொருளாதாரத்தைத் தாக்கி அழிப்பது பிரபாகரனின் இலக்காக இருந்தது. அதற்காக அவர் தென்னிலங்கையில் பல தாக்குதல்களை நடத்தினார். அத்தகைய தாக்குதல்களை அவர் 30 வருடங்கள் நடத்தியும் நாட்டின் பொருளாதாரத்தை அவரால் அழிக்க முடியவில்லை. ஆனால் பிரபாகரனினால் 30 வருடங்களாகச் செய்ய முடியாத அந்த வேலையை, ஜனாதிபதி கோட்டாபய இரண்டரை ஆண்டுகளில் நிறைவேற்றி விட்டார்" - என்றார் துமிந்த திஸநாயக்க. கோட்டாபயவிடம் அமைச்சுப் பதவி கிட்டாத பலரின் கோபங்கள் எப்படிப்பட்ட விமர்சனங்களாக - ஒப்பீடுகளாக - வருகின்றன என்பதை கவனித்துக் கொள்ளுங்கள்.

- மின்னல் -

---

## இதுவே போதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசாங்கம் உடனடியாகப் பதவி விலகுவதைத் தவிர வேறு மாற்று வழியில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொடுங்கோல் அரசாங்கத்தை அகற்றுவதற்கான மக்கள் போராட்டத்தை ஆரம்பிப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இதற்காக கட்சி நிற பேதங்களை மறந்து அனைவரையும் முன்வருமாறும் கேட்டுக் கொண்டார்.

இத்தருணத்தில், நாட்டுக்கு எதிராக ஒரு கும்பலையோ அல்லது தனி நபரையோ பாதுகாப்பதை விடுத்து, நாட்டு மக்களைப் பாதுகாப்பதில் தங்களை அர்ப்பணிக்குமாறு பாதுகாப்பு தரப்பினரிடமும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளை 5 நாட்களிலோ, 5 மாதங்களிலோ உடனடியாகத் தீர்க்க முடியாது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான பொய்களை நம்பி ஏமாற வேண்டாம் எனவும், இந்நாட்டு மக்களை தொடர்ந்தும் யாரேனும் ஏமாற்றவோ அல்லது தவறாக வழிநடத்தவோ முயற்சித்தால் அது துரதிஷ்டவசமான நிலை எனவும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (3ஆம் திகதி) நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்பக் குறைந்தது ஐந்து வருடங்கள் ஆகும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இதற்கப்பால் இந்நாட்டை கட்டியெழுப்புவோம் என அவர்கள் கூறும் பேச்சு மாயையானது எனவும் தெரிவித்துள்ளார்.

---

## 6, 400 லீற்றர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முரணான வகையில் எரிபொருள்களைப் பதுக்கி வைத்திருந்தமை தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த விசேட தகவல்களின் அடிப்படையில் நேற்று திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வைக்கப்பட்டிருந்த 31 பரல்களில் - 6400 லீற்றர் டீசல், பெட்ரோல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டன.

இதனையடுத்து சந்தேகநபர் ஒருவரையும் தாங்கள் கைது செய்தனர் என கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

---

## சர்வ கட்சி அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர் கூறியுள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் கீழ் பிரதமர் பதவியை ஏற்கமாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மந்தநிலையில் இருந்து இலங்கையை மீட்பதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு திறமையும் அறிவும் இல்லை என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

எனவே அனைத்து ஆளும்கட்சியை சேர்ந்த அமைச்சர்களும் பதவி விலகுமாறு மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

அத்தோடு அரசாங்கம் உடனடியாக இராஜினாமா செய்து அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
டீசல் கப்பல் இந்த வாரம் நாட்டை வந்தடைய உள்ளது, அடுத்த வாரம் 50,000 மெட்ரிக் தொன் பெற்றோல் கப்பலை இலங்கைக்கு கொண்டு வர மலேசிய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

தலா 40,000 மெட்ரிக் தொன் கொண்ட இரண்டு டீசல் கப்பல்கள் ஜூலை 8 அல்லது 9 மற்றும் ஜூலை 11 மற்றும் 14 க்கு இடையில் இலங்கையை வந்த டையத் திட்டமிடப்பட்டுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜூலை 15 மற்றும் 17 க்கு இடையில் மற்றுமொரு டீசல் கப்பலை கொண்டு வருவது குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. கட்டணம் செலுத்தப்பட்ட பெற்றோல் கப்பல் ஜூலை 22 அல்லது 23 ஆம் திகதிகளில் இந்த நாட்டை வந்தடைய உள்ளது.

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்திற்கு 135,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் கப்பல் ஜூலை 15 ஆம் திகதியும் மற்றுமொரு மசகு எண்ணெய் கப்பல் ஆகஸ்ட் 12ம் திகதியும் வரவுள்ளன.

மேலும் லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் ஜூலை 13-14 திகதிகளில் 18,000 மெட்ரிக் தொன் பெட்ரோல் மற்றும் 12,000 மெட்ரிக் தொன் டீசலையும், ஜூலை 30-31 திகதிகளில் 5000 மெட்ரிக் தொன் பெட்ரோல் மற்றும் 24,000 மெட்ரிக் தொன் டீசலையும் நாட்டுக்கு கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது.

---

## அமெ. உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நவம்பரில் இடம்பெறலாம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கை நட்பு நாடுகளிடம் கூடுதல் ஒத்துழைப்புகளை கோரி வருகின்றது.

இதேவேளை அமெரிக்க திறைசேரியின் ஆசியப்பிராந்தியத்துக்கான பிரதி உதவிச்செயலர் றொபேர்ட் கப்றொத் மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச்செயலாளர் கெலி கெய்டெலிங் உட்பட உயர்மட்ட குழுவினர் கடந்த வாரத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு பலதரப்பட்ட சந்திப்புகளில் கலந்துக்கொண்டிருந்தனர்.

இதன் போது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான இலங்கை - அமெரிக்கக் கூட்டுத்திட்டங்கள் மற்றும் ஒத்துழைப்புள் விஸ்தரிப்பு உள்ளிட்ட பரந்துபட்ட பல விடயங்கள் குறித்து அவர்கள் கலந்துரைளாடியிருந்தனர்.

இந்தக் குழுவினர் தற்போது வொஷிங்டன் திரும்பியுள்ள நிலையில் இலங்கைக்கான அமெரிக்க ஒத்துழைப்புகள் குறித்து முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்படலாம் என அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இராஜாங்க செயலர் அண்டனி பிளிங்கனின் இலங்கை விஜயம் தொடர்பான திகதி விவரங்களும் கூடிய விரைவில் அறிவிக்கப்படலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

## கேதீஸ்வரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தலைமையில் இடம்பெற்றது.

நேற்றைய தினம் திருக்கேதீஸ்வர ஆலய பாலாவி தீர்த்தக்கரையில் ஆறுமுக நாவலருக்கான சிலையும், திருக்கேதீஸ்வர ஆலயத்தில் உள் நுழையும் வீதியில் சுமார் 28 அடி நீளமான சிவன் சிலையும் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த அடியார்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்தும் இன்று திங்கள், நாளை செவ்வாய் நண்பகல் 12 மணியுடன் எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வு நிறைவடையும்.

பின்னர் கிரிகைகள் இடம்பெற்று 6 ஆம் திகதி புதன்கிழமை காலை மஹா கும்பாபிஷேக பெருவிழா இடம்பெற உள்ளது.

---

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதிகாரியினால் டுவிட்டரில் வெளியிடப்பட்ட பதிவில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், கட்டுப்பாடற்ற கடன்சுமை மற்றும் மோசமான பொருளாதார நிர்வாகத்தால் இலங்கை தொடர்ந்து பாதிக்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதுடன், ஊழல் அபாயத்தை எதிர்ப்பதற்கு புதிய சீர்திருத்தங்களைச் சேர்ப்பதாதே சர்வதேச நாணய நிதியத்தின் புதிய வேலைத்திட்டத்தின் நோக்கம் என சர்வதேச நாணய நிதியம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

இந்தப் பதிவிற்கு பதிலாளித்த அமெரிக்க செனட்டின் வெளிநாட்டு உறவுகள் குழு, அந்த முக்கிய நடவடிக்கையை எடுக்காமல், கட்டுப்பாடற்ற கடன் மற்றும் மோசமான பொருளாதார நிர்வாகத்தால் இலங்கை தொடர்ந்து பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளது.

---

## நாடு முற்றாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எரிபொருளை இறக்குமதி செய்து தாராளமாக விநியோகிக்கும் வரை இந்த அபாய நிலை தொடரும் என்றும் தெரியவருகிறது.

பொதுப் போக்குவரத்துச் சேவை பஸ்கள் மட்டுமன்றி, சுகாதார சேவைகள், கல்வி போன்ற அத்தியாவசிய சேவைகளையும் முன்னெடுக்க முடியாத அளவுக்கு எரிபொருள் நெருக்கடி மோசமடைந்துள்ளது.

மேலும், வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் சேவை மற்றும் மருத்துவ விநியோக சேவைகளுக்கு போதிய எரிபொருளை விநியோகிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த ஒரு வாரத்துக்கு நாட்டின் அன்றாட நடவடிக்கைகளை வழமையாகப் பேணுவதில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

---

## இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செய்யப்படவுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டது IND-PY-PK-MM-895 இலக்க படகு எனத் தெரிவிக்கப்பட்டது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அமெ. கூறும் அறிவுரை

நாட்டின் நிலைமை நாளுக்கு நாள், வரவர மோசமாகிக் கொண்டிருக்கின்றது. சேடம் இழுப்பது போன்ற நிலைமை. ஒவ்வொரு சேவையாக நிறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த வாரத்தோடு பாடசாலைகளுக்கும் முழுமையாக விடுமுறை என்றாகி விட்டது.

இவ்வளவுக்கும் காரணமான – பொறுப்புக் கூற வேண்டிய – அரசுத் தலைவர் விவஸ்தை கெட்டவராக, பிரக்ஞையே இல்லாதவர் போல, அதிகாரத்தைச் செலுத்துவதில் – ஆட்சியில் நீடிப்பதில் – மட்டும் கண்ணாக இருக்கின்றார்.

தோற்றுப்போன ஜனாதிபதியாகப் பதவி விலக விரும்பவில்லை என்று கூறிய நாட்டுத் தலைவர், முழு நாட்டையுமே தோல்வி கண்டு அழிந்த தேசமாக்கி விட்டுத்தான் விலகப் போகின்றார் போலும்.

இப்போதாவது பதவியை விட்டு இறங்கி, நாட்டை மீட்டெடுக்க வழி விடுமாறு விடுக்கப்படும் மன்றாட்டங்களுக்கு அவர் மசிபவராகத் தெரியவில்லை.

பேரினவாதக் காட்டுக் கூச்சலுக்கு எடுபட்டு, முட்டாள்தனமான தலைவரைத் தேர்வு செய்யும் தவறை இழைத்து விட்டோம் என்று தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்கள் இன்று தங்களைத் தாங்களே மனம் வெதும்பி நோகின்றார்கள்.

அமெரிக்காவின் வெளிவிவகார செனட் குழு நேற்றுமுன்தினம் ட்வீட் மூலம் விடுத்த ஒரு செய்திக் குறிப்பு இலங்கையின் இன்றைய மோசமான நிலைமைக்கான காரணத்தை பூடகமாக – அதேநேரம் பளிங்குக்கல் போல – தெளிவாகப் பிரதிபலித்துக் காட்டுவது கவனிக்கத் தக்கதாகும்.

"இலங்கையுடன் சர்வதேச நாணய நிதியம் செய்யும் எந்த உடன்பாடும் இலங்கையின் மத்திய வங்கியின் சுயாதீனம், ஊழல் – முறைகேடுகளுக்கு எதிரான கடுமையான பாதுகாப்பு ஒழுங்குகள், சட்டத்தின் ஆட்சியின் மேம்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்துவனாக அமைய வேண்டும். இந்தச் சீர்திருத்தங்களை நடைமுறையில் வராவிட்டால், மேலும் மோசமான பொருளாதார நிர்வாகம், கட்டுப்படுத்த முடியாத கடன்களால் சீரழியும் நிலைமை இலங்கையில் ஏற்படும்." – என்று அமெரிக்காவின் வெளியுறவுக்கான செனட் குழு சுட்டிக் காட்டியிருக்கின்றது.

இலங்கை மத்திய வங்கியை தமது இஷ்டப்படி இயக்கியமை மூலம், பெருமளவு ஊழல், மோசடிகள் செய்யப்பட்டன. நாட்டின் நிர்வாகமே ஊழல், மோசடிகள், சுத்துமாத்துகளில் மூழ்கிச் சீரழிந்தது. அது மாத்திரமல்ல, நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடக்கவில்லை. ஆட்சியாளர்கள் நாட்டைச் சூறையாடுவதற்கு வசதியாகக் காட்டுத் தர்பார் நடத்தினர். அதன் விளைவுதான் இந்தப் பேரழிவு நிலைமை என்று பல தரப்புகளும் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்தன.

இந்தளவு விவரங்களும் அமெரிக்க வெளியுறவுக்குழு வெளியிட்டுள்ள சிறிய ட்வீட் செய்தியில் அடங்கியிருப்பது கண்கூடு.

ஊழல், முறைகேடுகள், சீரழிவுகள், சூறையாடல்களுக்குக் காரணமானவர்கள் – பிரதான பொறுப்பாளர்கள் – ஆட்சியதிகாரத்தில் நீடிக்க, அந்தச் சீர்கேடுகளைத் திருத்தலாம் என்று நம்புவதும் அதனடிப்படையில் சீர்திருத்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதும் அபத்தச் செயற்பாடுகள்.

நாட்டின் இந்தச் சீரழிவு நிலைக்கு காரணமாவர்களை பதவியை விட்டு இறக்காமல், நாட்டை மீட்பதற்கு சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என்பதைத்தான் அமெரிக்க வெளியுறவுக்கான செனட் குழுவின் செய்தி துலாம்பரமாகத் தெரிவிக்கின்றது.

## வடக்கு, கிழக்கு பொருளாதார மேம்பாடுகள்; நியூயோர்க்கில் கலந்துரையாடல் நடந்தது

### புலம்பெயர் பிரதிநிதிகளுடன் சிறிதரன், சாள்ஸ் எம்.பிக்கள் பங்கேற்பு

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை அடுத்து வடக்கு,கிழக்கு பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலான திட்டமிடல்கள் மற்றும் எதிர்கால உபாயங்கள் தொடர்பில் நியூயோர்க்கில் முக்கிய கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் உலகத் தமிழ் அமைப்புக்களின் பேரவையின் அங்கத்தவர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வேலன்சுவாமிகள், மற்றும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவெல் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

வட அமெரிக்க தமிழ்ச்சங்க பேரவை 35 ஆவது ஆண்டாக நடத்தும் 'மாபெரும் பேரவைத்தமிழ் விழாவில்' பங்கேற்பதற்காக சிறிதரன், சாள்ஸ் உள்ளிட்டவர்கள் இலங்கையிலிருந்து சென்றுள்ளனர். மேற்படி விழா நியூயோர்க்கில் ஆரம்பமாகியுள்ள நிலையில் எதிர்வரும் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், உலகத் தமிழ் அமைப்புக்களின் பேரவையின் பிரதிநிதிகளுடன் மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்குள், வடக்கு, கிழக்கு பொருளாதார நிலைமைகள் தொடர்பில் இலங்கையிலிருந்து சென்ற பிரதிநிதிகளால் தெளிவுபடுத்தப்பட்டது.

இதனையடுத்து, வடக்கு,கிழக்கு பொருளாதார மேம்பாட்டுக்கான எதிர்கால திட்டமிடல்கள் மற்றும் உபாயங்கள் தொடர்பிலும், புலம்பெயர் பிரதிநிதிகள் உள்ளட்டவர்கள் ஆழமான கரிசனையை வெளியிட்டனர்.

அத்துடன், உலகத் தமிழ் அமைப்புக்களின் பேரவையின் பிரதிநிதிகள், சர்வதேச ரீதியில் நடத்தப்பட்டு கண்காணிக்கப்படும் சுதந்திர வாக்கெடுப்பு, வாக்கெடுப்பு நடைபெறும் வரை தீவின் வடக்கு – கிழக்கு பிராந்தியத்தில் உள்ள ஈழத் தமிழர்களுக்கான இடைக்கால சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை, அரசியல் வாதங்கள் மற்றும் சட்ட வழிமுறைகள் மூலம் உலகளவில் தமிழ் இனப்படுகொலை அங்கீகாரத்தை முன்னெடுத்தல், புலம்பெயர் தமிழர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச நீதிமன்றம் மற்றும் சர்வதேச நாடுகளில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக் குற்றங்களுக்காக இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல், தமிழர் இறையாண்மை அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சிக்காக குறுகிய மற்றும் நீண்ட காலப்பகுதியில் தமிழர் தேசத்தில் பொருளாதார வளர்ச்சிக் கட்டமைப்புக்களை உருவாக்குதல் ஆகிய இலக்குகளை நோக்கி செயற்படவுள்ளோம் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, சிறிதரன் மற்றும் சாள்ஸ் ஆகியோர் இந்தப் பயணத்தில் அமெரிக்க அரசின் இராஜாங்க திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் மற்றும் அமெரிக்க வாழ் புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் அமைப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருச்சி, மதுரை விமான நிலையங்களிலிருந்து இலங்கைக்கான சரக்கு விமான சேவை நிறுத்தம்

திருச்சி, மதுரை விமான நிலையங்களிலிருந்து இலங்கைக்கான சரக்கு விமான சேவை கடந்த வெள்ளிக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

கொழும்பிலிருந்து சென்னை, திருச்சி, மதுரை ஆகிய விமான நிலையங்களுக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் விமான சேவையை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய நாளாந்தம் சென்னைக்கு 3 சேவையும், திருச்சிக்கு 3 சேவையும், மதுரைக்கு ஒரு சேவையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும், தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக சென்னைக்கு 2 விமான சேவையும், திருச்சிக்கு ஒரு விமான சேவையும், மதுரைக்கு வாரத்துக்கு 3 சேவையும் என குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளிக்கிழமை முதல் சரக்கு விமான சேவையை நிறுத்திக்கொள்வதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்காரணமாக சென்னை, திருச்சி, மதுரையில் இருந்து நாளொன்றுக்கு சராசரியாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த 10 தொன் பொருள்கள் தேக்கமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

## ஆடைத் தொழிற்சாலைகள் நாட்டில் மூடப்படும் அபாயம்

இலங்கையில் ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் 200 சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகள் இவ்வாறு மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்சாரத் தடை காரணமாக இவ்வாறு ஆடைக் கைத்தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன என கூறப்படுகின்றது.

பெரிய ஆடைத் தொழிற்சாலைகள் ஐ.ஓ.சீ. நிறுவனத்திடமிருந்து எரிபொருள் பெற்றுக் கொண்ட போதிலும், சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகள் எரிபொருள் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

அத்துடன், ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர் போக்குவரத்து பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

## பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகும் அபாயம் அதிகரிப்பு!

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகும் அபாயம் அதிகரித்துள்ளதாகக் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக காகிதங்களை இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன

இதன்காரணமாக, அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள் உள்ளிட்ட ஏனைய பாடசாலை உபகரணங்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன.

இந்தநிலையில், நாட்டின் பல பகுதிகளிலும் பாடசாலை உபகரணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலையை விட அதிகமாக வர்த்தகர்கள் விற்பனை செய்வதால் தாம் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளோம் என பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன் தற்போதைய எரிபொருள் நெருக்கடியில் பஸ் பயண கட்டணங்களும் அதிகரித்துள்ளதால் மாணவர்களை, பாடசாலைகளுக்கு அனுப்புவதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளளோம் பெற்றோர் குறிப்பிடுகின்றனர்.

# பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி; பாரதத்தின் புரட்சிகரத் திட்டம்

**பசுமை ஹைட்ரஜன் என்றால் என்ன?**

**பசுமை ஹைட்ரஜன் என்பது ஒரு வகையான தூய எரியாற்றலாகும். இது சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கவல்ல எரியாற்றலைப் பயன்படுத்தி, தண்ணீரை ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனாகப் பிரிப்பதன் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.**

**நீர் வழியாக மின்சாரம் கடத்தப்படும்போது ஹைட்ரஜன் உற்பத்தியாகிறது. இந்த ஹைட்ரஜன் பல விடயங்களுக்கு எரியாற்றலாக செயல்படும். ஹைட்ரஜனை உருவாக்கப் பயன்படுத்தப்படும் மின்சாரம் புதுப்பிக்கவல்ல ஆற்றல் மூலங்களிலிருந்து வருகிறது. அதனால் மாசு ஏற்படாது. அதனால்தான் இது பசுமை ஹைட்ரஜன் என்று அழைக்கப்படுகிறது. எண்ணெய் சுத்திகரிப்பு, உரம், எஃகு மற்றும் சிமென்ட் போன்ற கனரக தொழில்துறைகளை, கார்பன் இல்லாத ஒன்றாக ஆக்கிட இது உதவும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். எனவே, உலகளாவிய கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கும் இது உதவியாக இருக்கும்.**



பசுமை ஹைட்ரஜன் குறித்து தற்போது மீண்டும் விவாதம் எழுந்துள்ளது. நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் அமர்வின் போது, இந்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, பசுமை ஹைட்ரஜன் துறையில் இந்தியா முன்னணி இடத்திற்கு வரும் என்று தெரிவித்ததே அதற்கு காரணம்.

எரிசக்தி தேவைகளுக்காக புதைபடிவ எரிபொருள்களை பெரிதும் நம்பியிருக்கும் ஒரு நாட்டிற்கு இது ஒரு லட்சிய அறிக்கையாக கருதப்படுகிறது.

ஆனால் உலகெங்கிலும் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு என்ற இலக்கை அடைவதற்கான அழுத்தம் அதிகரித்து வருவதால், இந்தியாவும் தூய எரிசக்தி தொடர்பாக ஒரு தீவிரமான கொள்கையை எடுத்துள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா இருக்க விரும்புகிறது. மோடி அரசு இந்த ஆண்டு தனது தேசிய ஹைட்ரஜன் கொள்கையை அறிவித்துள்ளது.

இந்தியாவின் தனிநபர் கார்பன் உமிழ்வு விகிதம் மிகவும் குறைவுதான். இருப்பினும் நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்குக்கான காலக்கெடுவை 2050ல் இருந்து 2070 ஆக இந்தியா அதிகரித்துள்ளது. ஆனால் உலகெங்கிலும் உள்ள கார்பன் உமிழ்வுகளின் கடுமையான தரநிலைகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு பசுமை வரி போன்ற விதிகள், பசுமை ஹைட்ரஜனைக் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்க இந்தியாவைத் தூண்டியுள்ளது.

கார்பன் இல்லாத ஹைட்ரஜன் அல்லது பசுமை ஹைட்ரஜன் இந்த நேரத்தில் முழு உலகத்தின் செயல் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. மாற்று எரிபொருளாக இருக்கும் இயற்கை எரிவாயு (CNG), நிலக்கரி, டீசல் மற்றும் கனரக எரிபொருள் எண்ணெயை விட தூய்மையானதுதான். ஆனால் தொழில்புரட்சிக்கு முந்தைய வெப்பநிலைக்கு 1.5 முதல் 2 டிகிரி செல்சியஸ் அதிகம் வரை பூமியின் வெப்பநிலையை கட்டுப்படுத்த அதற்கு திறன் இல்லை. அதேசமயம் பருவநிலை மாற்றத்தை தடுக்க, இது மிகவும் அவசியம்.

இந்தியா இந்த ஆண்டு பெப்ரவரியில் தேசிய ஹைட்ரஜன் இயக்கத்தை அறிவித்தது. இதன்படி, 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியா ஒவ்வொரு ஆண்டும் 50 லட்சம் தொன் பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும் திறன் பெறவேண்டும். பசுமை ஹைட்ரஜனை உருவாக்க தண்ணீர் மற்றும் மலிவான மின்சாரம் தேவை. இந்தியா இந்த இரண்டு வளங்களையும் கொண்டுள்ளது. இந்தியா மிக நீண்ட கடற்கரையையும் அதிக சூரிய ஒளியையும் கொண்டுள்ளது. சூரிய மின்சாரம் மற்றும் கடல் நீர், பசுமை ஹைட்ரஜனை உருவாக்க மிகவும் உதவியாக இருக்கும். இந்தியா ஒரு படி மேலே சென்று உலகளாவிய பசுமை ஹைட்ரஜன் மையமாக தன்னை உருவாக்கிக்கொள்ளும் திட்டத்தை அறிவித்துள்ளது.

**இந்தியாவில் பசுமை ஹைட்ரஜனின் தேவை மற்றும் விலை**

ஹைட்ரஜன் ஒரு நிறமற்ற வாயு. ஹைட்ரஜனின் நிறம், பச்சை, நீலம், சாம்பல் முதல் நீலமும் பச்சையும் கலந்த நிறம் என, அது எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து அமையும். பசுமை ஹைட்ரஜன் மட்டுமே தூய்மையான எரியாற்றல் ஆகும். இது புதுப்பிக்கவல்ல ஆற்றலைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் புதைபடிவ எரிபொருள்களிலிருந்து 60 லட்சம் தொன் க்ரே ஹைட்ரஜன் உற்பத்தி செய்யப்பட்டது என்று TERI கூறுகிறது. 2050க்குள் இந்தியாவில் ஹைட்ரஜனின் தேவை ஐந்து மடங்கு அதிகரிக்கும். ஆனால் பசுமை ஹைட்ரஜன், புதைபடிவ எரிபொருள்களை விட 50 சதவிகிதம் மலிவானதாக மாறும் போது மட்டுமே அதனால் போட்டியிட முடியும்.






இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட எரியாற்றலில் 40 சதவிகிதம் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆகும். சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக அதிக அளவில் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடு இந்தியா. ஆனால் பெரிய அளவிலான ஆற்றல் சேமிப்பு வசதி இல்லாமல் புதுப்பிக்கவல்ல ஆற்றல், வழக்கமான எரிசக்தி ஆதாரங்களுக்கு மாற்றாக இருக்க முடியாது. அதாவது புதுப்பிக்கவல்ல எரிசக்திக்கான சேமிப்புத் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அதை பெரிய அளவில் பயன்படுத்த முடியும். லித்தியம் பற்றிகளால் பெரிய அளவில் ஆற்றலை சேமிக்க முடியாது. இருப்பினும், இது தற்போது மின்சார வாகனங்களில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.




ஆனால் பசுமை ஹைட்ரஜனை மிகப் பெரிய அளவில் சேமிக்க முடியும். நீண்ட தூரம் செல்லும் டிரக்குகள், பற்றரியால் இயங்கும் கார்கள், பெரிய சரக்குகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள், ரயில்கள் போன்றவற்றுக்கு இது ஒரு சிறந்த ஆற்றல் ஆதாரமாக இருக்கும்.

**இந்தியாவின் பசுமை ஹைட்ரஜன் கொள்கை என்ன?**

இந்திய அரசு தனது பசுமை ஹைட்ரஜன் கொள்கையின் கீழ் ஆராய்ச்சி மற்றும் பிற தேவைகளுக்கு நிதி வழங்குவதாக அறிவித்துள்ளது. ஹைட்ரஜன் உற்பத்தியை ஊக்குவிக்க, மலிவான புதுப்பிக்கவல்ல எரியாற்றல் மூலமான, மாநிலங்களுக்கு இடையேயான மின் பரிமாற்றத்திற்கு 25 ஆண்டுகள் கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 2025 ஜூன் மாதத்திற்கு முன் தொடங்கும் திட்டங்களுக்கு மட்டுமே இந்த விலக்கு கிடைக்கும். பசுமை ஹைட்ரஜன் அல்லது பசுமை அமோனியா ஆலையின் புதுப்பிக்கவல்ல எரியாற்றல் வாங்குவதற்கான விண்ணப்பம் கிடைத்த 15 நாள்களுக்குள் திறந்த அணுகல் வழங்கப்படும். அரசின் தள்ளுபடிக் கொள்கைகளுக்குப் பிறகு, நாட்டின் மிகப் பெரிய நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், புதுப்பிக்கவல்ல எரிசக்தி துறையில் ஒரு பெரிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் ஹைட்ரஜன் தேவை 2029 – 30க்குள் 1.17 கோடி தொன்களை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அதன் தேவை 67 லட்சம் தொன்னாக உள்ளது. இந்த 67 லட்சம் தொன்களில் சுமார் 36 லட்சம் தொன்கள் அதாவது 54 சதவிகிதம் பெட்ரோலிய சுத்திகரிப்புக்காக பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ளவை உர உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், இது க்ரே ஹைட்ரஜன் ஆகும். இது இயற்கை எரிவாயு அல்லது நாப்தாவிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது நிறைய மாசுபாட்டை ஏற்படுத்துகிறது. இது இந்தியாவின் கார்பன் உமிழ்வு குறைப்பு இலக்கில் பெரும் தடையாக உள்ளது.

**கார்பன் உமிழ்வைக் குறைப்பதில் பசுமை ஹைட்ரஜன் எவ்வளவு உதவியாக இருக்கும்?**

பசுமை ஹைட்ரஜன் கார்பன் உமிழ்வைக் குறைக்க மிகவும் உதவியாக இருக்கக்கூடும். உதாரணமாக, எஃகு மற்றும் இரும்பு மிகவும் மாசுபடுத்தும் தொழில்களில் ஒன்றாகும். இது உலகின் மொத்த பசுமைக்குடில் வாயு உமிழ்வில் ஏழு சதவிகிதம் ஆகும். கார்கள் தயாரிப்பது முதல் பாலங்கள் கட்டுவது வரை எகு பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. 2050ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் எதிர்பார்க்கப்படும் மொத்த கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தில் இந்தத் தொழிலின் பங்களிப்பு 35 சதவிகிதமாக உயரும். எகுத் தொழில் பசுமை ஹைட்ரஜனைப் பயன்படுத்தத் தொடங்கினால், இந்த கார்பன் வெளியேற்றம் கிட்டத்தட்ட நின்றுவிடும். இந்தியாவில் மாசுக்கட்டுப்பாட்டு விடயத்தில் இது மிகப்பெரிய வெற்றியாக இருக்கும்.

**பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியில் இந்தியாவின் சவால்கள் என்ன?**

இந்தியாவில் பசுமை ஹைட்ரஜனின் உற்பத்தி விலை மலிவாக இருக்கும்போது மட்டுமே அதன் பயன்பாடு அதிகரிக்கும். அதாவது, எகு, சிமெண்ட் மற்றும் ஒட்டோமொபைல் தொழிற்சாலைகள் தங்கள் செலவைக் கட்டுக்குள் வைத்திருக்க முடிந்தால் மட்டுமே அதைப் பயன்படுத்தும். தற்போது, வழக்கமான எரிபொருளில் இருந்து தயாரிக்கப்படும் எகுவை விட, பசுமை ஹைட்ரஜன் மூலம் தயாரிக்கப்படும் எகுவின் விலை 50 முதல் 127 சதவிகிதம் அதிகம்.

தற்போது இந்தியாவில் ஹைட்ரஜன் விலை கிலோவுக்கு 340 ரூபா முதல் 400 ரூபா வரை உள்ளது. பசுமை ஹைட்ரஜனின் பயன்பாடு தொழில்துறையில் அதிகரிக்கவேண்டும் என்றால் அதன் விலை கிலோவுக்கு 150 ரூபாயாக ஆகவேண்டும். தற்போது சுத்திகரிப்பு, உரம் மற்றும் எஃகு தொழில்கள் ஹைட்ரஜனின் மிகப் பெரிய நுகர்வோர். இந்தத் தொழில்களுக்கு மேலதிகமாக, மின் உற்பத்தி, ஹைட்ரஜன் சேமிப்பு மற்றும் இயக்கத் தொழில்கள் (பற்றரி மூலம் இயங்கும் கார்கள், ரயில், டிரக் பேருந்துகள் மற்றும் கப்பல்கள்) ஆகியவற்றிலும் மலிவான ஹைட்ரஜன் உற்பத்திக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

(09ஆம் பக்கம் பார்க்க)

# லசந்த படுகொலை தொடர்பாக கோட்டாபயவுக்குத் தொடர்புண்டு?

## நிஷாந்த டி சில்வா கண்டறிந்துள்ளார் என ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் சர்வதேச அமைப்பு தெரிவிப்பு

காணாமல்போன குறிப்புப்புத்தகம், வழக்கத்துக்கு மாறான புதிய தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் மிகநெருக்கியதொடர்புஇருப்பதைபுலனாய்வுப்பிரிவின் முன்னாள் அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா கண்டறிந்திருக்கிறார் என ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா கடந்த 2015 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துவந்த நிலையில், கடந்த 2019 நவம்பரில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானதை அடுத்து நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

அதன்பின்னர் நெதர்லாந்தின் ஹேக் நகரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயத்தில் கடந்த மேமாதம் 13 ஆம் திகதி ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், அத்தீர்ப்பாயத்தில் ஆஜரான நிஷாந்த டி சில்வா, லசந்தவின் படுகொலை தொடர்பில் தான் கண்டறிந்த விடயங்கள் குறித்து சாட்சியமளித்தார்.



நிஷாந்த டி சில்வா நாட்டைவிட்டு வெளியேறியதன் பின்னர் பொதுக்கட்டமைப் பொன்றின் முன்னிலையில் தோன்றியதும், லசந்தவின் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட ஆதாரங்கள் தொடர்பில் பொதுவெளியில் கருத்து வெளியிட்டதும் இதுவே முதற்தடவையாகும்.

சட்டவிரோதப் படுகொலைகள், கடத்தல்கள், வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுத்திருப்பினும், ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை, கீத்நொயார் கடத்தப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம், போத்தல ஜயந்த கடத்தப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் உள்ளடங்கலாக பல முக்கிய வழக்குகளின் விசாரணை அதிகாரியாகப் பணியாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா நாட்டிலிருந்து வெளியேறிய பின்னர் லசந்தவின் படுகொலையுடன் தொடர்புடைய வகையில் அவர் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன என சர்வதேச மட்டத்தில் இயங்கிவரும் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

# 15 ஆயிரம் இருதய நோயாளிகள் அறுவை சிகிச்சைக்காக மருந்துகளுக்கான தட்டுப்பாட்டால் நாட்டில் காத்திருப்பு!

எரிபொருள் நெருக்கடி காரணமாக, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரண பற்றாக் குறை, போஷாக்கான உணவு வகைகளை பெற்றுக் கொள்வதில் காணப்படும் சிரமங்கள் உள்ளிட்ட விடயங்கள் காரணமாக நாட்டில் சுமார் 60 லட்சம் பேர் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளனர் என அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார தெரிவித்தார்.

குழந்தைகளின் ஆரோக்கியம், கர்ப்பிணித் தாய்மார்களின் ஆரோக்கியம் மற்றும் போஷாக்கு, தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியம் பாரியளவில் மோசமடைந்துள்ளதாகவும், தற்போது நாட்டில் சுமார் 15 ஆயிரம் இருதய நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கான காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் –

இது மிகவும் ஆபத்தான நிலையாகும். அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், நிலைமை மேலும் மோசமாகும். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

நம் நாட்டில் மாதந்தோறும் சுமார் 25-30 லட்சம் பேர் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். நீரிழிவு நோயாளிகள், இருதய நோய் உள்ளவர்கள் மருந்துகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

5 வயதுக்குட்பட்ட சுமார் 15 லட்சம் குழந்தைகள் ஒவ்வொரு மாதமும் நாடு முழுவதும் உள்ள கிளினிக் நிலையங்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

தற்போது குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் கிளினிக்குகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் நெருக்கடி காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இது குழந்தைகளின் ஆரோக்கியத்தைக் கடுமையாகப் பாதிக்கிறது.

வருடாந்தம் சுமார் 3 லட்சம் பேர் கர்ப்பிணித் தாயாகிறார்கள். இந்த எரிபொருள் நெருக்கடியால், அவர்களும் மோசமாகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். ஊட்டச்சத்து குறைபாட்டால் கர்ப்பிணித் தாய்மார்கள் கடுமையான விளைவுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையேற்றத்துக்கு மத்தியில் தேவையான ஊட்டச்சத்தான உணவுகளை பெற்றுக்கொள்வதற்கு சிரமப்படுகின்றனர். அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது எதிர்காலத்தில் புரதம் மற்றும் விற்றமின் குறைபாடுகளை ஏற்படுத்தும். – என்றார்.

# நாடாளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதி நியமிப்பு!

## சாத்தியம் என்கிறார் டிலான் பெரேரா



அரச நிர்வாகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோல்வியடைந்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே ஜனாதிபதி பதவி விலக வேண்டும்.

நாடாளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கான சாத்தியம் அதிகளவில் உள்ளது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல என பொதுஜன பெரமுனவின் ஒருசிலர் குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமைக்கு தவறான பொருளாதார முகாமைத்துவம் பிரதான காரணியாக உள்ளது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்ததைத் தொடர்ந்து பொருளாதாரத்தை வழிநடத்தியவர்கள் பொறுப்பில் இருந்து விலகினார்கள். அவ்வாறாயின் தவறான முகாமைத்துவமே அனைத்துநெருக்கடிகளுக்கும் காரணம்.

செல்வந்த தரப்பினரை திருப்திப்படுத்தும் வகையில் வழங்கப்பட்ட வரிச்சலுகை அரச வருவாய் இழப்பைத் தீவிரப்படுத்தியது.

பொருளாதார நெருக்கடி மிக மோசமான முறையில் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. நாட்டு மக்கள் அனைவரும் வர்க்க அடிப்படையிலில்லாத வகையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் வைத்துக்கொண்டு எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது எனக் குறிப்பிடப்படுகிறது.

அரச நிர்வாகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோல்வி என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.ஜனாதிபதி பதவி விலக வேண்டும்.

நாடாளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதியை நியமிப்பதற்கான சாத்தியம் அதிகளவில் உள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சளவில் மாத்திரமே பிரச்சினைகளுக்குத் தீர்வு குறிப்பிடுகிறார்.

சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் அல்லது பொதுத் தேர்தலை நடத்தி மக்கள் தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்துகொள்ள வாய்ப்பு வழங்க வேண்டும். – என்றார்.

# இந்திய வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களுக்கு 5 வருட விசா!

## அந்நாட்டு உயர் தூதரகம் வரவேற்பு

அமைச்சர் தம்மிக்க பெரேராவால் இலங்கையிலுள்ள இந்திய வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களுக்கு 5 வருட விசா கையளிக்கப்பட்டுள்ளமையானது, இலங்கையில் முதலீடுகளை மேம்படுத்தவும் இலகுவாக வர்த்தக நடவடிக்கைககளை மேற்கொள்ளவும் வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும் என்று இலங்கையிலுள்ள இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் வெளிநாடு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் விசாக்களின் காலத்தை 5 ஆண்டுகள் வரை நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அண்மையில் அமைச்சர் தம்மிக்க பெரேரா அறிவித்திருந்தார்.

அத்தோடு தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு செல்லவிருப்போரிடம், உரிய ஆவணங்கள் அனைத்தும் காணப்படுமாயின் அவர்களுக்கு விரைவில் கடவுச்சீட்டு வழங்கப்படும் என்றும் , ஒருநாள் சேவையில் இவற்றை வழங்குவதற்கு பிரத்தியேக கரும பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே சனிக்கிழமை இலங்கையிலுள்ள இந்திய வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களுக்கு 5 வருட விசா, அமைச்சர் தம்மிக பெரேராவால் கையளிக்கப்பட்டது. இதற்கு வரவேற்பு தெரிவித்து இந்திய உயர்தூதரகம் பதிவிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

# கும்பாபிஷேகம் செய்யுங்கள் குலநாசபிஷேகம் செய்யாதீர்கள்

**இந்த விடயத்தை ஒட்டி காலைக்கதிர் 27- 06 - 2022 இதழில் ஒரு விளக்கக் கட்டுரை இதே கட்டுரையாளரினால் விவரங்களோடு வரையப்பட்டுப் பிரசுரமாகியிருந்தது. அதற்கு, பொறுப்பானவர்களிடமிருந்து பதில் ஏதும் வரவேயில்லை. பதில் கூற வேண்டிய கடப்பாடு ஏதும் தங்களுக்கு இல்லை என்று 'பொறுப்பானவர்கள்' எண்ணியிருப்பார்கள் போலும். நம் நாட்டில் பொறுப்புக் கூறல் நிலைமை அதுதான். திருக்கேதீஸ்வரம் தனியுடைமை ஆலயமல்ல. கோவில் நிர்வாகம் தொடர்பான சர்ச்சைகள் பல இருக்கலாம். அவற்றுக்குப் பொதுவெளியில் பதில் கூறுவது, கூறாமல் விடுவது வேறு விடயம். ஆனால், இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்படுவது போன்ற விடயங்களுக்குப் பதில் கூறப்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். நாளை மறுதினம் கும்பாபிஷேகத்தோடு விடயம் முடிந்து விட்டது என்று நாம் நினைக்கவில்லை. அதன் பின்னரும் கூட இந்தக் கட்டுரையாளர் கிளப்பிய கேள்விகளுக்குப் 'பொறுப்புள்ளவர்களிடம்' நியாயமான பதில் இருந்து அவர்கள் பொறுப்புக் கூறும் கடப்பாட்டை நிறைவு செய்யும் விதத்தில் அதைத் தருவார்கள் எனில் அதற்கு உரிய இடமளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**- ஆசிரியர் -**

திருக்கேதீஸ்வரத்தில் 06.07.2022 புதன்கிழமை ஆனி உத்தரத்தன்று காலை 09 மணிக்குக் கும்பாபிஷேகம் நிகழவுள்ளது. இந்நேரத்தில் 8இல் குருவின் மகாதோஷம்உள்ளது. அதேநாள் ஆனிஉத்தரத்தன்று மிதுன லக்கினத்ததில் காலை 06 மணிக்கு உத்தம கும்பாபிஷேக முகூர்த்தம் உள்ளது. அனைவரது நலனையும் கருத்தில் கொண்டு கும்பாபிஷேகத்தை உத்தம சுப முகூர்த்தம் காலை 06 மணிக்கு மாற்று மாறு 27.06.2022 காலைக்கதிர் பத்திரிகையில்

**இணைப்பு 1 திருக்கணித பஞ்சாங்கம்**

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
| 12:36 a.m. வரை | 02:28 a.m. வரை | 04:29 a.m. வரை | 06:44 a.m. வரை |
| 10 குரு | 11 செவ்வாய் ராகு | 12 சுக்கிரன் | லக்கினம் சூரியன் புதன் |
| கும்பம் 10:54 p.m. வரை | தேவப்பிரதிஷ்டை முகூர்த்தம் நவக்கிரக நிலை ஆனி 22 புதன்கிழமை 06-07-2022 | | கடகம் 06:51 a.m. வரை |
| 9 சனி | மிதுன லக்கின சுப முகூர்த்தம் | | 2 |
| மகரம் 09:09 p.m. வரை | காலை 05:56 முதல் 06:44 வரை கும்பாபிஷேகம் | | சிங்கம் 10:52 a.m. வரை |
| 8 | 8ல் கிரகங்கள் எதுவும் இல்லை. ஆகமப்படி உத்தம சுப முகூர்த்தம் | | 3 |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |
| 07:12 p.m. வரை | 05:04 p.m. வரை | 02:54 p.m. வரை | 12:50 p.m. வரை |
| 7 | 6 | 5 கேது | 4 சந்திரன் |
| கன்னி லக்கினம் என்று பஞ்சாங்கத்தில் பிழையாக அச்சிட்டுள்ளனர் | | | |

கேட்டிருந்தேன்.

குருக்கள் குசுகுசுத்தால் குற்றமில்லை என்று சொல்லுவார்கள். ஆதீனம், சிவாச்சாரியார், குருக்கள்,ல்.....இவர்கள் தோஷமில்லை என்று சொன்னால் தோஷம் பறந்து விடுமோ? இன்றுவரை முகூர்த்தப்பிழைதிருத்தப்படவில்லை. பிழையை ஒத்துக்கொள்ளா விட்டால் அது சரியாக மாறாது. பிழை என்று சொல்லியும் திருந்தாதது பெரும் பிழையாக மாறும்.

ஏற்க முடியாத பதில்கள் திருக்கேதீஸ்வர முகநூலில்உள்ளன. அர்த்தமில்லாத வியாக்கியானங்கள் சொல்லப்படுகின்றன. இவற்றால் எவருக்கும் பலனில்லை. இதனைச் தோஷமற்ற சுபமுகூர்த்தம் என்று நியாயப்படுத்தப் பிழையான காரணங்களைச் சொல்லி மேலும் அவமானத்தையும் பாவத்தையும் சம்பாதிக்காதீர்கள்.

"ஆனி உத்தரம் என்பது சிவபெருமானுடைய வழிபாட்டிலே மிக உயர்ந்தது. அன்றைக்கு சுவாமிக்கு எந்தவித வைபவங்கள் செய்தாலும் நம்முடைய தோஷங்களை எல்லாம் போக்கிடுவார். சில விடயங்கள் இப்படித்தான் நம்முடைய புராணங்கள் கூறுகின்றன என்றால், அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். அதில நம்ம ஆராய்ச்சிகள் எதுவும் பண்ணவே வேண்டாம்." - இவ்வாறு 30.06.2022 அன்று சொல்லியது திருக்கேதீஸ்வர முகநூலில் உள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஆனி உத்தரத்தில் கும்பாபிஷேகம் நடப்பதில்லை. செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமை, அட்டமி, மரணயோகம் போன்ற தோஷங்கள் உள்ள நாளில் ஆனி உத்தரம் வந்தால் அன்று கும்பாபிஷேம் செய்யும் வழக்கம் கிடையாது. கும்பாபிஷேக முகூர்த்தத்தில் 8 இல் குருவின் தோஷம் மிகப் பெரியது. 8 இல் கிரகம் உள்ள நேரத்தில் ஆனி உத்தரத்தில் கும்பாபிஷேகம் செய்யும் வழக்கம் இல்லை.

திருக்கேதீஸ்வர கும்பாபிஷேக முகூர்த்தத்தில் 8 இல் குருவின் மகா தோஷம் உள்ளது. அதனால்தான் ஆனி உத்தரம் தோஷங்களைப் போக்கும் என்று புராணம் படிக்கிறீர்கள். தோஷம் இல்லை என்றால்,

**இணைப்பு 2 திருக்கேதீஸ்வர கும்பாபிஷேகம்**

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
| 12:36 a.m. வரை | 02:28 a.m. வரை | 04:29 a.m. வரை | 06:44 a.m. வரை |
| 8 குரு | 9 செவ்வாய் ராகு | 10 சுக்கிரன் | 11 சூரியன் புதன் |
| கும்பம் 10:54 p.m. வரை | 8ல் குரு - ஆகமப்படி குலநாச பலன் அசுப முகூர்த்தம் | | கடகம் 06:51 a.m. வரை |
| 7 சனி | திருக்கேதீஸ்வரம் கும்பாபிஷேகம் | | 12 |
| மகரம் 09:09 p.m. வரை | நவக்கிரக நிலை ஆனி 22 புதன்கிழமை 06-07-2022 | | சிங்கம் 10:52 a.m. வரை |
| 6 | சிங்க லக்கின முகூர்த்தம் காலை 09:00 முதல் 10:30 வரை | | லக்கினம் |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |
| 07:12 p.m. வரை | 05:04 p.m. வரை | 02:54 p.m. வரை | 12:50 p.m. வரை |
| 5 | 4 | 3 கேது | 2 சந்திரன் |


அதைப் போக்குவதைப் பற்றிப் புராணம் பேச மாட்டீர்கள். கும்பாபிஷேகத்தில் 8 இல் குருவின் தோஷம் இருப்பதனாலேயே பிரீதி செய்ய உள்ளீர்கள். ஆனி உத்தரம் தோஷத்தைப் போக்கும் என்றால், ஏன் பிரீதி செய்கிறீர்கள்? மருந்து நோயை மாற்றும். இதற்காக நோய் உள்ள பெண்ணைத் திருமணம் செய்வீர்களா? தொட்டுக்கூடப் பார்க்க மாட்டீர்கள். இதே போன்று, ஆனி உத்தரம் தோஷத்தைப் போக்கினாலும் அன்று 8 இல் கிரக தோம் உள்ள முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்வதில்லை.

**இணைப்பு 3 இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்**

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
| 12:36 a.m. வரை | 02:28 a.m. வரை | 04:29 a.m. வரை | 06:44 a.m. வரை |
| 7 குரு | 8 செவ்வாய் ராகு | 9 சுக்கிரன் | 10 சூரியன் புதன் |
| கும்பம் 10:54 p.m. வரை | 8ல் செவ்வாய் ஆகமப்படி குலநாச பலன் அசுப முகூர்த்தம் | | கடகம் 06:51 a.m. வரை |
| 6 சனி | வாக்கிய பஞ்சாங்க கும்பாபிஷேகம் | | 11 |
| மகரம் 09:09 p.m. வரை | நவக்கிரக நிலை ஆனி 22 புதன்கிழமை 06-07-2022 | | சிங்கம் 10:52 a.m. வரை |
| 5 | கன்னி லக்கின முகூர்த்தம் மு.ப. 10:52 முதல் 11:54 வரை | | 12 |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |
| 07:12 p.m. வரை | 05:04 p.m. வரை | 02:54 p.m. வரை | 12:50 p.m. வரை |
| 4 | 3 | 2 கேது | லக்கினம் சந்திரன் |
| சிங்க லக்கினம் குருவுக்குப் பிரீதி என்று பஞ்சாங்கத்தில் பிழையாக அச்சிட்டுள்ளனர் | | | |

**- கௌசிகர் -**

**இணைப்பு 4 - பூர்வ காரண ஆகமம் 59ம் படலம் லிங்க ஸ்தாபன விதி 10வது ஸ்லோகம் கும்பாபிஷேக முகூர்த்தத்தில் எட்டாமிடத்தில் கிரகங்கள் இருத்தலாகாது**



ஜாதகம் கணிப்பது போன்று, சுப முகூர்த்த நாளின் நவக்கிரக நிலையைக் குறித்து முகூர்த்த லக்கினத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். முகூர்த்த லக்கினத்தில் 8 ஆம் இடத்தில் எந்தவொரு கிரகமும் இருக்கக் கூடாது. 8 ஆம் இடம் வெற்றிடமாக, சுத்தமாக இருக்க வேண்டும். இவ்விதி பூர்வ காரண ஆகமத்தில் உள்ளது இணைப்பு 4. இதனை மீறினால் குலநாசம் என்று காலப்பிரகாசிகையில் உள்ளது இணைப்பு 5.

1. திருக்கேதீஸ்வரத்தில் நீண்ட காலமாகத் திருக்கணித பஞ்சாங்கம் பின்பற்றப்பட்டு வருகிறது. அதில் உள்ள தேவப்பிரதிஷ்டை முகூர்த்த விவரம் இணைப்பு 1இல் உள்ளது. இந்த முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் என்று திருக்கேதீஸ்வர ஆலய முகநூலில் 26.03. 2022இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முகூர்த்தத்தை மாற்றியது ஏன்? இந்த முகூர்த்தத்தில் என்ன தவறு உள்ளது? திருக்கணித பஞ்சாங்கம் பிழை என்று நிரூபிக்க முடியுமா?

2. 06.07.2022 காலை 09 மணிக்கு சிங்க லக்கினத்தில் 8 இல் குருவுக்குப் பிரீதி செய்து கும்பாபிஷேகம் செய்ய விஞ்ஞாபனம் (இணைப்பு 2) வெளியிட்டுள்ளீர்கள். ஆகம, சாஸ்த்திரங்களில் சிங்க லக்கினத்தில் 8 இல் குருவுக்குப் பிரீதி செய்து தேவப்பிரதிஷ்டை செய்யலாம் என்று சொல்லப்பட்டுள்ளதா? ஆதாரத்தை தாருங்கள்.

3. சிவபெருமானால் அருளப்பெற்ற ஆகமத்தில் 8 இல் கிரகம் உள்ள நேரத்தில் தேவப் பிரதிஷ்டை செய்யக் கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. இவ் விதியை மீறி 8 இல் குரு உள்ள மகா தோஷ நேரத்தில் கும்பாபிஷேகம் செய்ய உள்ளீர்கள். ஆகமம் பிழை என்று சிவனுக்கே உபதேசமா?

இந்தக் குழப்பத்திற்கு வாக்கிய, திருக்கணிதப் பிரச்சினையே காரணம். திருக்கணிதத்தைப் பின்பற்றும் திருக்கேதீஸ்வரத்தில், வாக்கிய விசிறி ஐயர்கள் கும்பாபிஷேகம் செய்ய வந்துள்ளனர். திருக்கேதீஸ்வர நிர்வாகம் திருக்கணிதப்படி கும்பாபிஷேக முகூர்த்தத்தை நிர்ணயம் செய்தது. அதனை கும்பாபிஷேகம் செய்ய வந்த வாக்கிய விசிறி ஐயர்கள் மாற்றி விட்டனர்.

(09ஆம் பக்கம் பார்க்க)

**இணைப்பு 5 காலப்பிரகாசிகை கும்பாபிஷேக முகூர்த்தத்தில் 8ம் இடத்திலுள்ள கிரக பலன்**

There should be no planet in the 8th house lest the family may perish.

8-ஆமிடத்தில் எந்த ஒரு கிரஹமும் இருக்கலாகாது. இருப்பின் குலநாசம் ஏற்படும்.

# டிஜிற்றல் பணப்பரிமாற்றம்

## நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நுட்பியல் அவத்தையில் டிஜிற்றல் பணப்பரிவர்த்தனை சேவைகள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்திருக்கின்றன. வங்கிகளில் பணப்பரிமாற்றத்திற்கு வங்கி அலுவலகங்களில் தவங்கிடந்த காலம் மலையேறிவிட்டது. கையடக்கதொலைபேசியில், மடிக்கணனியில் பணிப் பரிமாற்றத்தை எங்கிருந்தும் விரைவாக எளிதாக மேற்கொள்ள முடியும் என்ற நிலை வந்தாகிவிட்டது. ஒரு கிளிக் செய்தால்போதும் என்ற நிலை உருவாகிவிட்டது. இந்த நிலைமை கோவிட்-19 தாக்கம் மேலும் விரைவும் விரிவும்படுத்தியிருப்பதை அவதானிக்கலாம்.

உலக வணிகம் அதன் நவீன பயனர்கள், காகிதங்களில் தங்கள் சேவைகள் இருப்பதை விரும்பவில்லை, மேலும் நீண்ட வரிசைகள், தாமதங்களை விரும்பவில்லை. விரைவான மற்றும் எளிதான வணிக நடவடிக்கைகளையே அதிகளவில் விரும்புகிறார்கள். Azimo மற்றும் PayPal போன்ற பயன்பாடுகளால் சந்தை நிரம்பியிருப்பதைக் காணலாம். ஆனால் அவை அனைத்தும் வாடிக்கையாளர்களின் இதயங்களை வெல்வதில்லை என்ற குறையுமுண்டு.

சமீபத்திய பணப் பரிமாற்றப் போக்குகள் என்பது ஒன்லைன் கட்டண வசதிகள், அவற்றின் முக்கிய அம்சங்கள், பணப் பரிமாற்ற செயலிகள் போன்ற பலவிடயங்களை உள்ளடக்குகின்றன. அதற்கான சிறப்பு நுட்பியல் அவத்தை உருவாகிவருகின்றது போலும்.

**1.ஸ்மார்ட் ஸ்பீக்கர்கள்**

டிஜிற்றல் பணிப்பரிமாற்றத்தில் ஸ்மார்ட் ஸ்பீக்கர்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. அதாவது பணம் செலுத்த வங்கி தளத்தில் உள்நுழைவதற்குப் பதிலாக, ஒருவர் தனது கொடுக்கல் வாங்குதலுக்காகக் இரண்டு குரல்




கட்டளைகளை வழங்குவதாகும். இன்று ஸ்மார்ட் ஸ்பீக்கர்கள் பணப்பரிமாற்றத்தில் வேகமாக வளர்ந்து வருகின்றது. இருப்பினும் இதில் பாதுகாப்புக் கவலைகள் உண்டு.

**2.தொடர்பு இல்லாத கொடுப்பனவுகள்**

கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்குப்பின்னர் வங்கியுடன் நேரடித் தொடர்பு இல்லாத கொடுப்பனவுகள் பிரபலமடைந்துள்ளன.Near-Field Technology (NFC) நுட்பியல் அடிப்படையில நடைபெறுகின்றது. இந்த கட்டண முறையானது, சாதனத்தை வாசிப்புக் கருவி மேல் அசைப்பதன் மூலம் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள அனுமதிக்கிறது.

NFC தொழில்நுட்பம் எந்தவொரு ஸ்மார்ட் சாதனத்தின் மூலமாகவும் பணம் செலுத்த அனுமதிக்கிறது: ஸ்மார்ட்போன், டேப்லெட், ஸ்மார்ட்வாட்ச் போன்றன பயன்படுத்தப்படலாம். தவிர, NFC கொடுப்பனவுகள்




PIN ஐ உள்ளிடுவதைத் தவிர்த்து மறைகுறியாக்கப்பட்ட தரவுகளை உடனடியாக படிக்கும் சாதனத்திற்கு அனுப்புகிறது.

**3.மெசஞ்சர்களில் பணம் செலுத்துதல்**

Facebook Messenger குறுஞ்செய்தி அனுப்புவது, அழைப்பது,வீடியோ ஒலி வடிவங்களை அனுப்புவது போன்றவற்றைச் செய்யமுடியும். இதன் வழியாக பணம் அனுப்புவது, பெறுவது போன்ற பணிகளை மேற்கொள்ள முடியும். Facebook Messenger வழியாக நண்பருக்கு நிதி அனுபபுவதற்கு, முதலில் நண்பருடன் உரையாடலை ஆரம்பிக்க வேண்டும். பின்னர் "$" பொத்தானைத் தட்டி, அனுப்ப விரும்பும் தொகையை உள்ளிடவேண்டும். பின்னர் "Next" என்பதைத் தட்டினால் பணம் அனுப்பபப்படும். மேலும் மெசஞ்சர் வங்கிச் சேவை வேகமானது, அஹிது வேளை இது இலவசம் மற்றும் (பேஸ்புக் வழக்கில்) உலகில் உள்ள எவருக்கும்



பணம் அனுப்ப அனுமதிக்கிறது. WeChat வங்கிச் சேவை Facebook Pay போன்ற வசதிகள் இந்தப்பணப் பரிவர்த்தனைக்கு உதவுகின்றன. கிடைக்கும்.

**4.மொபைல் பணப்பைகள்**

ஒரு மொபைல் வாலட்(பணப்பை) வசதிகளில் இப்



போது பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வாய்ப்புள்ளது. கிரெடிட் கார்டுகள், கூப்பன்கள் போன்றவற்றை நிர்வகிக்க இது அனுமதிக்கிறது. ஆப்பிள், கூகுள் மற்றும் சாம்சங் போன்ற பெரிய நிறுவனங்கள் ஏற்கனவே தங்கள் சொந்த மொபைல் வாலட்களைக் கொண்டுள்ளன. இந்த தொழில்நுட்பத்தின் பயன்பாடு படிப்படியாக வளர்ந்து வருவதால், மேலும் பல நிறுவனங்கள் வரும் ஆண்டுகளில் தங்கள் சொந்த மொபைல் வாலட்டைக் கொண்டிருக்கும். மொபைல் வாலட் பயனர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 140 மில்லியன் அதிகரித்து வருகிறது.

டிஜிற்றல் பணப் பரிமாற்றத்திற்கு பணப்பரிமாற்ற மென்பொருளை மற்றும் செயலிகள் பற்றிய அறிவு முக்கியமாகிறது எனலாம். இந்தத் நுட்பியல் வேகமாக வளர்கிறது

1.Peer 2 Peer(P2P) கட்டண அமைப்புகள் மென்பொருள்

பியர் - டு - பியர் (பி2பி) கொடுப்பனவுகள் மூன்றாம் தரப்பு அதாவது நிதி இடைத்தரகர்களை விலக்குகிறது. பி2பி கட்டணங்கள் பாரம்பரிய ஆன்லைன் வங்கியிலிருந்து வேறுபட்டவை, இது பரிவர்த்தனையை முடிக்க நிறைய விவரங்களை உள்ளிடுவதைக் குறிக்கிறது. பி2பி கொடுப்பனவுகளில், பெறுநரின் கார்டு எண் அல்லது போன் எண்ணைத் தெரிந்து கொண்டால் போதும். குறைந்த கட்டணங்கள், உலகளாவிய கவரேஜ் மற்றும் 24/7 அணுகல்தன்மை ஆகிய வசதிகள் இந்த அமைப்பில் உண்டு. இது நண்பர்களுக்கு பணம் அனுப்புவதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பணம் செலுத்துவதற்கும், நிதி திரட்டுவதற்கும் சிறந்தவை. PayPal இலவச பி2பி கட்டண முறைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

2.Business 2 Business (B2B) பணப் பரிமாற்ற மென்பொருள்

பிசினஸ்-டு-பிசினஸ் (B2B) கொடுப்பனவுகள் இரண்டுவணிகர்களுக்கு இடையேமேற்கொள்ளப்படும் பணப்பரி பரிவர்த்தனைகளுக்கான வசதியாகும். இதில் பெரியளவான பணப்பரிவர்த்தனைகள் நடைபெறும். (B2B) வாடிக்கையாளர்கள் பொதுவாக மிகவும் பழமைவாதிகள், பெரும்பாலான வணிகங்கள் இன்னும் காகித காசோலைகளை நம்பியுள்ளன. இருப்பினும (B2B) வசதிகாரணமாக இ-காமர்ஸின் வளர்ச்சியின் காரணமாக, பல்வேறு அம்சங்களுடன் கூடிய அதிகமான (B2B) கட்டண வசதிகள் வளர்ந்து வருகின்றன.

3.Business 2 Costumer (B2C) வணிகத்திலிருந்து நுகர்வோர் மென்பொருள்

வணிகத்திலிருந்து நுகர்வோர் (B2C) என்பது ஒரு வணிகத் தயாரிப்புகள் அல்லது சேவைகள் நுகர்வோருக்கும் நேரடியாக விற்பனை செய்யும் செயல்முறையைக் குறிக்கிறது. நுகர்வோருக்கு நேரடியாக விற்கும் நிறுவனங்களை B2C நிறுவனங்கள் என்று குறிப்பிடலாம். இது முக்கியமாக இணையத்தின் மூலம் நுகர்வோருக்கு தயாரிப்புகள் மற்றும் சேவைகளை விற்கும் ஆன்லைன் சில்லறை விற்பனையாளர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

**4.டிஜிட்டல் பணம் அனுப்பும் சேவைகள்**

டிஜிட்டல் பணம் என்பது வெளிநாட்டில் வசிக்கும் ஒருவரிடமிருந்து அனுப்பப்படும் பணம். பாரம்பரிய பணப் பரிமாற்றங்களைப் போலன்றி, பெரும்பாலான டிஜிட்டல் பணப் பரிமாற்றச் சேவைகள் ஒரே நாளில் பணப் பரிமாற்றம் மற்றும் குறைந்த பரிவர்த்தனை கட்டணங்களை வழங்குகின்றன, அதே நேரத்தில் அனுப்பப்படும பணம் எங்கு உள்ளது என்பதை செயலிமூலம்; கண்காணிக்க முடியும்.

**5.மொபைல் டாப் - அப் செயலி வசதி**

மொபைல் டாப் - அப் வசதி என்பது ரீசார்ஜ் செய்யும் சேவையாகும், இது கடைக்குச் சென்று டாப் - அப் வவுச்சரை வாங்காமலேயே ப்ரீபெய்டுமொபைல்போன்களை டாப் அப் செய்யும் வசதியாகும். TopUp.com மற்றும் Ding Top-up ஆகியவை மிகவும் பிரபலமான இரண்டு டாப் - அப் சேவைகள ஆகும்.இது உலகெங்கிலும் உள்ள 400 க்கும் மேற்பட்ட மொபைல் தொலைபேசி சேவை வழங்குனர்களுடனும் இணைத்து இந்த சேவை நடக்கிறது.

**6.மின்னணு கட்டணம் செலுத்தும் சேவைகள்**

மின்னணு (எலக்ட்ரானிக்) கட்டணச் சேவை என்பது ஒரு மென்பொருள் ஒழுங்காகும். கட்டணங்களை விரைவாகவும் எளிதாகவும் செலுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட இணையதளமாகும்.

டிஜிற்றல் பணப்பரிமாற்றத்திற்கு இத்தனை வசதிகள் இருந்தாலும் பயனர்களின் முதன்மைக் கவலை பாதுகாப்பு பற்றியதாகும். டிஜிற்றல் பணப்பரிமாற்றத்தில் தகவல்கள் மற்றும் நிதி இரண்டும் பாதுகாக்கப்படுகின்றனவா? என்ற கேள்வி எப்போதும் மனதைக்குடைந்து கொண்டிருக்கிறது போலும்.

# ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை விடயத்தில் உக்ரைனுக்கு நீதி, தமிழர்களுக்கு அநீதியா?

## பிரித்தானியாவை நோக்கி நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கேள்வி

உக்ரைன் போர் தொடர்பில் ரஷ்யாவுக்கு எதிரான பல தீர்மானங்கள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் அது நிறைவேற்றாது எனத் தெரிந்தும் அதனைக் கொண்டுவரக் காரணம் உக்ரைன் விடயத்தை சர்வதேச தளத்தில் வெளிப்படுத்துவதே ஆகும். அதுபோலவே தமிழினப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலுக்கு சிறிலங்கா விவகாரத்தை ஐ.நா பாதுகாப்பு சபைக்கு கொண்டுவர போதுமான காரணங்கள் காணப்படுகின்றன என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பொறுப்புக்கூறலுக்கு சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும் நிலைப்பாட்டுக்கு ஐ.நா. பாதுகாப்பு சபையில் போதுமான ஆதரவு கிட்டாது என பிரித்தானியாவின் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் நாடாளுமன்ற துணைச் செயலாளர் விக்கி வோட் கேள்வியொன்றுக்கு பதில் அளிக்கும் போது தெரிவித்திருந்தார்.

பிரித்தானியா உட்பட ஐந்து கூட்டு நாடுகளே ஐ.நா. மனித உரிமைச்சபையில் சிறிலங்கா தொடர்பிலான 46/1 தீர்மானத்தை முன்னெடுத்திருந்த நிலையில், பிரித்தானிய அரசாங்கத்தின் இந்தக் கருத்து தமிழர்களுக்கு பெருத்த அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், பிரித்தானியா அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு புதிதல்ல. இதே நிலைப்பாட்டை முன்னரும் ஒரு தடவை வெளிப்படுத்தியுள்ளது. அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவுவதில் முன்னிற்று உழைத்த பிரித்தானியா, இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலுக்கு நீதியைத் தேட, அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தை பயன்படுத்தத் தயங்குவது ஏமாற்றத்தையே தருகின்றது.

குறிப்பாக சமகாலத்தில் உக்ரைன் போர் தொடர்பில் பிரித்தானியா உட்பட மேற்குலகம் நாடுகள் ரஷ்யாவுக்கு எதிரான பல தீர்மானங்களை ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு கொண்டு சென்றுள்ளன. பாதுகாப்பு சபையில் அது நிறைவேற்றப்படாது எனத் தெரிந்தும் அதனைக் கொண்டுவரக் காரணம் உக்ரைன் விடயத்தை சர்வதேச தளத்தில் வெளிப்படுத்துவதே ஆகும். அதுபோலவே தமிழினப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலுக்கு சிறிலங்கா விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு கொண்டுவர போதுமான காரணங்கள் காணப்படுகின்றன.

உக்ரைன் மக்களுக்கு ஒரு நீதி, தமிழ்மக்களுக்கு ஒரு நீதியா என்ற கேள்வி எழுகின்றது.

சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைச்சபையில் கையாளப்படட்டும். ஆனால் இனவழிப்புக்கும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்கும் போர்க் குற்றங்களுக்குமான பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறை என்பது ஐ.நா. பாதுகாப்புச் சபையூடாகவே கையாளப்படவேண்டியுள்ளது. பொறுப்புகூறலுக்கு சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த, சிறிலங்கா விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்லுங்கள். அப்போது நீதிக்கு எதிரானவர்கள் யார் என்பது தெரியவரும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

2021 ஜனவரி 12 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளரர் மிச்சேல் பச்சலேற் அம்மையாரின் அறிக்கையில், சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புமாறு விடுத்திருந்ததோடு, ஐ.நா. மனித உரிமைகளுக்கான நான்கு முன்னாள் ஆணையாளர்கள், ஐ.நாவின் நான்கு முன்னாள் உயர் அதிகாரிகள், இலங்கைக்கு பயணம் செய்து அறிக்கைகளை எழுதிய ஐ.நாவின் ஒன்பது முன்னாள் சிறப்பு அறிக்கையாளர்கள், ஐ.நா. செயலாளர் நாயகம் குழுவின் மூன்று உறுப்பினர்கள், இலங்கை பற்றிய நிபுணர்கள் ஆகியோர் சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புமாறு அழைப்பை விடுத்திருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக 4,000 சைக்கிள்களை வழங்க முடிவு!

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக 4 ஆயிரம் சைக்கிள்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், பொலிஸாரின் கடமைகளை இலகுவாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக சில விசாரணைகள் மற்றும் களப்பணிகள் தடைப்பட்டுள்ளன என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தகைய நிலைமையை கட்டுப்படுத்தும் வகையில், இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# உணவகங்களை நாடுபவர்களின் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சி

உணவுக்காக உணவகங்களை நாடிச் செல்பவர்களின் எண்ணிக்கை பாரியளவில் குறைவடைந்துள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்சினை காரணமாக நாடு முழுவதும் 80 வீதமான உணவகங்கள் தற்போது மூடப்பட்டுள்ளன.

மேலும், எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடி காரணமாக அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் 50 சதவீத சிற்றுண்டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எரிபொருள் நெருக்கடி தொடர்ந்தால் நாடு முழுவதும் உள்ள அனைத்து உணவகங்களும் மூடப்படும் அபாயம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

உணவு மளிகைப் பொருள்களின் விலைவாசி உயர்வால், உணவகங்களில் சாப்பிடுபவர்களின் எண்ணிக்கைசுமார் 50 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சாப்பாடு வாங்க உணவகங்களுக்கு வருபவர்கள் அதன் விலையை கேட்டுவிட்டு ஒரு கிளாஸ் அல்லது இரண்டு கிளாஸ் தண்ணீரைக் குடித்து விட்டு செல்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கான பொருள்கள் விநியோகம் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் ஹோட்டல் பணியாளர்கள் பலர் வேலையை விட்டுவிட்டு கூலி வேலைக்குச் சென்றுவிட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவ முகாம்களில் இருந்து வைத்தியர்களுக்கு எரிபொருள்

அருகில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து வைத்தியர்களுக்கு எரிபொருள் விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கு இராணுவத் தளபதியும் இணக்கம் தெரிவித்துள்ளார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து வைத்தியர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் போது ஏற்படும் அமைதியின்மையை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி; ....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்ய நிறுவனங்கள் என்ன செய்கின்றன?**

நாட்டின் மிகப்பெரிய நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், பசுமை எரிசக்தி உற்பத்தியில் 75 பில்லியன் டொலர் முதலீடு செய்வதாக அறிவித்துள்ளது. ஆனால் பசுமை ஹைட்ரஜனில் எவ்வளவு முதலீடு செய்யப் போகிறது என்பதை நிறுவனம் தெரிவிக்கவில்லை என்று CNBC கூறுகிறது. இந்த ஆண்டு ஏப்ரலில், ஹைதராபாத்தை தளமாகக் கொண்ட கிரீன்கோ குழுமம் மற்றும் பெல்ஜிய நிறுவனமான ஜான் கோக்ரில், இந்தியாவில் இரண்டு ஜிகாவாட் திறன் கொண்ட ஹைட்ரஜன் எலக்ட்ரோலைசர் தொழிற்சாலையை அமைப்பதாக அறிவித்தன. குழுவால் சீனாவுக்கு வெளியே அமைக்கப்பட இருக்கும் மிகப்பெரிய தொழிற்சாலை இதுவாகும்.

**(நன்றி: பி.பி.ஸி. - தமிழ்)**

# கும்பாபிஷேகம் செய்யுங்கள் ......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கேதீஸ்வர கும்பாபிஷேக முகூர்த்தக் குழப்பத்திற்குச் சனியே காரணம். இவர் இறுதி நாள்களிலும் மாற்றத்தை ஏற்படுத்த வல்லவர். 06.07.2022 அன்று சனி வாக்கியத்திற்கு மகரத்திலும் திருக்கணிதத்திற்கு கும்பத்திலும் சஞ்சாரம் செய்கிறார். இதனால் திருக்கணிதப்படி அன்று காலை 06 மணிக்கு மிதுன லக்கின கும்பாபிஷேக முகூர்த்தம் உள்ளது. இந்நேரத்தில் வாக்கியப்படி கும்பாபிஷேக முகூர்த்தம் இல்லை. 06.07.2022 காலை 06:44இன் பின்னர் எந்தவொரு பஞ்சாங்கப்படியும் கும்பாபிஷேக முகூர்த்தம் இல்லை. 06.07.2022 காலை 08:39இன் பின்னர் திருக்கேதீஸ்வர முகூர்த்தம் காலை 09 மணிக்கு மரணயோகம் என்று தமிழகத்தின் மிகப் பிரபல்யமான பாம்பு வாக்கிய பஞ்சாங்கத்தில் உள்ளது.

திருக்கணிதத்தில் 06.07.2022 காலை 06 மணிக் கும்பாபிஷேக முகூர்த்தம் இருப்பதை இரகுநாதையர் பார்த்து விட்டார். அதே நாளில் அவரது வாக்கியத்திலும் தேவப்பிரதிஷ்டை முகூர்த்தம் (இணைப்பு3) குறித்தார். அன்று 8 இல் குரு இருப்பதால் சிங்க லக்கினத்திலும் 8 இல் செவ்வாய் இருப்பதால் கன்னி லக்கினத்திலும் கும்பாபிஷேக முகூர்த்தம் இல்லை. குரு, செவ்வாய் இவற்றின் தோஷத்திற்குப் பிரீதி செய்து தேவப்பிரதிஷ்டை விதிகள் இல்லை. இரகுநாதையருக்குக் கிரக நிலை, லக்கினம் கணிக்கத் தெரியாது. கும்பாபிஷேக முகூர்த்த நிர்ணய விதிகளும் தெரியாது. அவர் குருவுக்குப் பிரீதியுடன் சிங்க லக்கின கும்பாபிஷேக முகூர்த்தம் குறித்தார். நேரத்தை பிழையாக முற்பகல் 10:56 முதல் 11:54 வரை என்று கணித்து விட்டார். இந்நேரத்தில் கன்னி லக்கினமே உள்ளது. இப்பிழையான முகூர்த்தத்தில் பண்டாரவளையில் ஒரு கோவில் கும்பாபிஷேகம் நிகழவுள்ளது. இவ்வாலயம் முகூர்த்த நேரப் பிழையைத் திருத்த வேண்டும்.

வாக்கியத்தின் இப்பிழையான முகூர்த்தம் திருக்கேதீஸ்வரத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியது. அங்கே கும்பாபிஷேகம் செய்யச் சென்ற வாக்கிய விசிறி ஐயர்கள் வாக்கியத்தில் உள்ளவாறு குருவுக்குப் பிரீதி செய்து சிங்க லக்கினத்தில் காலை 09:00 மணி முதல் 10:30 மணி வரை கும்பாபிஷேக விஞ்ஞாபனம் வெளியிட்டுள்ளனர்.

பிழையான வாக்கிய பஞ்சாங்கத்தை 80 சதவீத மக்கள் சரி என்று நம்பிப் பின்பற்றுகின்றனர். ஏனையோர் சரியான திருக்கணிதத்தைப் பின்பற்றுகின்றனர். திருக்கணிதத்தைச் சரி என்று நிரூபிக்க முடியும். வாக்கியத்தை பிழை என்றுதான் நிரூபிக்கலாம். வாக்கிய பஞ்சாங்கமே இலங்கையை அழித்தது. 1987 இல் ஆரம்பித்து 1990 வரை தொடர்ந்த இந்தியப் படைகளின் யுத்தப் பேரழிவுக்கு வாக்கியமே காரணம். 1986 கார்த்திகை விளக்கீட்டைப் பிழையாக ஐப்பசியில் குறித்து நாட்டையும் மக்களையும் அழிக்குமாறு தீபம் ஏற்றி வழிபட வைத்தது. 2006 இல் மாவிலாற்றில் ஆரம்பித்து 2009 இல் முள்ளிவாய்க்கால் வரை தொடர்ந்த யுத்தப் பேரழிவுக்கும் வாக்கியமே காரணம். 2005 இலும் கார்த்திகை விளக்கீட்டைப் பிழையாக ஐப்பசியில் குறித்தனர். அந்நாளில் நாட்டையும் மக்களையும் அழிக்குமாறு நல்லூர் கந்தனுக்கு தீபம் ஏற்றி வழிபாடு செய்தனர். வருடம் தோறும் மலடி, விபச்சாரி, விதவை,...மரண பலன் விவாக முகூர்த்தங்களைப் பிழையாக டசின் கணக்கில் வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிக்கின்றனர். இதனால் கலாசார சீரழிவுகள் நடக்கின்றன. இப்பஞ்சாங்கத்தைத் தடை செய்தால்தான் இலங்கைத் தமிழர்கள் நன்றாக வாழ முடியும்.

குலநாச பலன் கும்பாபிஷேகத்தால் பலிக்கடா ஆகுவது தர்மகர்த்தா, குருக்கள்,.. நாட்டு மக்கள். இதனால் அனைவருக்கும் தீமையே. எவருக்கும் நன்மை இல்லை. அசுப முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்பவர்களே பின்விளைவுகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். தர்மகர்த்தா அவர்களே, உங்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையிலேயே நீங்கள் உள்ளீர்கள். அனைவரது நலனையும் கருத்தில் கொண்டு கும்பாபிஷேக நேரத்தைக் காலை 06:00 மணி முதல் 06:40 மணி வரை உள்ள உத்தம மிதுன லக்கின முகூர்த்த வேண்டும். திருக்கேதீஸ்வரத்தைக் கட்ட பல கோடி பணத்தை வழங்கிய இந்திய அரசு கும்பாபிஷேக முகூர்த்தப் பிழையைத் திருத்துமாறு ஆலோசனை கூற வேண்டும்.

**வாழ்க வளத்துடன்**

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!




- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-54

சுமந்திரன் ஒரு திறமைசாலியாகத் தமிழ் மக்கள் பலராலும் கருதப்படுகிறார். ஆனால் ஓர் இனத்தின் முடிவு வெறும் தனிநபருக்கு இருக்கும் திறமையிலோ அல்லது கெட்டித்தனத்திலோ மட்டும் தங்கியிருப்பதில்லை. அவர் வகிக்கும் பதவிகளோ, அந்தப் பதவிகள் தரும் அதிகாரங்களோ, செல்வாக்குகளோ இனத்திற்கு விடிவுகளைப் பெற்றுத் தந்து விடா.

அப்படியானால் பொன்னம்பலம், செல்வநாயகம், சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம், குமார் பொன்னம்பலம் என வரிசையாக வந்த தலைவர்கள் மற்றும் இந்திய அரசின் அனுசரணையோடு, இணைந்த வடக்கு – கிழக்கு முதல்வராக இருந்த வரதராஜப்பெருமாள் – ஏன் பின்னர் இனத்தின் தலைவனாகக் கருதப்பட்ட பிரபாகரன் – போன்றோரின் கெட்டித்தனங்களின் அர்ப்பணிப்புகள் கூட தமிழ் மக்களுக்கு இதுவரை விடிவைத் தரவில்லை.

அவர்கள் தாங்கள் தனி மனிதர்களாக ஓர் இனத்தின் பிரதிநிதிகள் என உணர்ந்து செயல்பட வேண்டும். இனத்தில் உள்ள அனைவரின் திறமைகளையும் சேர்த்து, ஒருமைப்படுத்தி அவர்களின் நோக்கங்களையும் இலட்சியங்க ளையும் திறமையாகக் கையாளுவதற்கு ஏற்ற பொறிமுறைகளை சாதுரியமாகவும் திறமையுடனும் நகர்த்துபவராக இருந்தால் தான் காரியசித்தி பெற்றவராவார்.



ஆதலால் தனிமனிதனாக அவர் ஈடுபடும் காரியங்கள், தமிழ் மக்களின் இலட்சியங்களைக் குட்டிச் சுவராக்கி விடும் என்ற ஆதங்கங்களில் இருந்து சுமந்திரன் தொடர்பான எதிர்ப்புணர்வு எழுகின்றது.

சுமந்திரனும் சம்பந்தனும் ஸ்ரீலங்காவில் சாத்தியமானவர்களுடன் இணைந்து, விட்டுக் கொடுத்து, தமிழ் மக்களது உரிமைகளை தேசிய நீரோட்டத்தில் நகர்த்திச் சென்று, ஒற்றுமையாக வளர்ச்சியையும் தீர்வையும் காணலாம் எனச் சிந்திக்கலாம்.

சிங்கள பேரினவாதம் மட்டுமல்ல, பேரினை மக்களே இந்தியாவினது மேற்பார்வையையோ, ஆளுமைகளையோ, இந்தியா தமிழ் மக்களுக்காக பரிந்து பேசுவதையோ என்றுமே விரும்புவதில்லை. இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கு அமைய செய்யப்பட்ட 13 ஆவது திருத்தம் அதிகாரப்பரவலுக்கு வித்திடுவதாலும், தமிழினத்தின் தனித்துவத்தை ஏற்றுக் கொள்வதாலும், ஒப்பந்தத்தையும் அவர்கள் (பேரினவாதிகள்) வெறுக்கிறார்கள்.

ஆகவே சம்பந்தனும் சுமந்திரனும் போருக்குப் பின்னான காலங்களிலிருந்து சிங்கள பெரும்பான்மையின் அரசுகளுக்கு அனுசரணை தந்து, ஓர் இணக்கத்தில், தமிழ் மக்களுக்கு மேலும் இடர்கள் வராமல், முன்னேறிச் செல்லலாம் என எண்ணி காரியங்கள் செய்கின்றனர் என்றே படுகின்றது.

இந்தியாவிடம் இவர்கள் ஓடிப்போய், அவர்கள் (இந்தியத் தரப்பு) அதில் ஈடுபட்டு, ஒப்பந்தத்தை நிறைவேற்றித் தரச் சொல்லிக் கேட்டால், அது பேரினவாதிகளுக்கு அதிருப்தியைத் தரும், சிங்களப் பெரும்பான்மை தன்னையும் கூட 'எதற்கும் இந்தியாவிடம் ஓடிப் போகும் அமிர்தலிங்கம் போல' கணித்து, எதுவித மதிப்பும் தர மாட்டார்கள், 'நாட்டின் துரோகி' எனத்தான் பார்ப்பார்கள் என சம்பந்தன் அங்கலாய்க்கிறார்.

ஆகவே, இந்தியா தமிழ் மக்களுடன் பேசி இருந்தாலும், அவர்களையும் (தமிழ் மக்களையும்) ஒப்பந்தத்திற்குப் பங்குதாரர்களாக்காது செய்த ஒப்பந்தத்தை அவர்கள் (இந்தியாவே) தங்களுடைய ஆளுமைகளைப் பாவித்து, அமல்படுத்தட்டும், அப்படியானால் அது அந்த இரண்டு நாடுகளின் உறவுகளை ஒட்டியது, ஆதலால் தமிழ் மக்களின் தலைவர்கள் அவற்றை நிர்பந்தித்தார்கள் எனச் சிங்களப் பெரும்பான்மையினர் கருத்துக் கொள்ளத் தேவையில்லை என்ற சமாதானத்தை தங்களுக்கே அவர்கள் (சம்பந்தன் தரப்பினர்) சொல்லிக் கொள்கிறார்கள்.

சாதித் திமிரில் ஊறி, ஆசாரம் பார்க்கும் உடையார் ஒருவர், தன்னைப் பிறர்



மதிக்க வேண்டும் என்பதற்காக பொது வெளிகளில் எல்லாம் சாதிகளை ஒழிக்க வேண்டும், யாவருக்கும் ஆலயப் பிரவேசம் தரப் பாடுபட வேண்டும் என்று பேசுவாராம். ஒருநாள் உடையாரது வீட்டுக்குக் கீழ் சாதிகளின் பிரதிநிதிகள் ஊரில் ஆலயப் பிரவேசம் பற்றிப் பேசுவதற்கு போக, உடையார் திகைத்து விட்டார். அவர்களை வரவேற்று வீட்டிலிருந்து பேசுவதா அல்லது வாசலில் வைத்தே சம்பாஷித்து திருப்பி அனுப்புவதா என்ற சங்கடம் அவருக்கு. அந்த இரவு நல்ல நிலவு பெய்து கொண்டிருந்தது. சமயோசிதமாக 'நல்ல நிலவு. வெளியில் காற்றும் சுகமாக இருக்கிறது. நிலவில் இருந்தே பேசுவோம், வாருங்கள்!' என்று வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்றார். அதேபோல் சம்பந்தனும் போரின் தீவிரமான நாள்களில் இருந்து விடுதலைப் புலிகள் பற்றி அக்கறை கொள்ளவில்லை. மக்களின் பாதுகாப்பைக் கவனிக்காமல் மஹிந்த அரசு இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை எடுப்பதாகக் கருத்துக்கள் சொன்னார். கடைசி நாள்களிலும் நிலாவில் இருப்பதற்காக தமிழ்நாடு சென்று விட்டார். நிலா காலத்துக்குப் பின் திரும்பியதும், விடுதலை புலிகளின் ஆயுதப்போராட்டம் இல்லாத நிலையில், தீர்வு ஒன்றைச் சிங்கள தலைவர்கள் தர வேண்டும் என்று எதிர்பார்ப்பில் இருக்கிறார்.

'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை' என இரண்டையுமே விரும்புபவர்கள், இரண்டையுமே இழந்து விடலாம். தமிழ்த் தேசியப் பரப்பில் இல்லாத கட்சிகள், தங்களது ஆதரவாளர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகளுக்கு முயல்வது போல சம்பந்தனோ – முக்கியமாக சுமந்திரனோ – முயலுகிறார்கள் என்ற பொதுவான குற்றச்சாட்டுகள் எழுவதைக் காண முடியவில்லை.

மாறாக, விடுதலையை அல்லது உரிமைகளை இவர்கள் சேதப்படுத்தி விடலாம் என்ற கோபங்களும் ஆதங்கங்களும்தான் இப்படியான காணொலிகளில் காணக் கூடியதாக இருக்கின்றது. தன்னிச்சையான பேச்சுகளும் செயல்களும் சில சமயங்களில் இருவரிடமிருந்தும் காணொலிகளில் அவ்வப்போது வெளிப்பட்டாலும், அவை பலரின் மூக்கில் வியர்வையை தந்தாலும், எவ்விடத்திலும் கட்சியின் நிலைப்பாட்டைக் கணக்கெடுத்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்பதையே அவர்கள் வலியுறுத்துகின்றமையால் தங்களுக்கு வரக்கூடிய பல வாய்ப்புகளையும் இழக்கிறார்கள்.

தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் பலவற்றை முன்னெடுத்து நேர விரயங்கள் செய்வதால், தன் தொழிலின் பாதிப்பையும் சுமந்திரன் கருதுவதில்லை. ஆனால் முழு நேர அரசியல்வாதியாகவும் அவர் மாறிவிடவில்லை. இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் நாட்டுக்கு முன்னேற்றம் வருவது கடினம் என்பதைத் தெளிவாக வலியுறுத்துகிறார். அந்தக் கூற்றுக்கள் செவிமடுக்கப்படுகின்றன.

தமிழ் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் செயற்பட்டு கொண்டிருப்பவர்கள் வலுவாகக் குறைந்து விட்டார்கள். இது நாட்டில் மட்டுமல்ல, புலம்பெயரிலும் கூட. ஆகவே, தமிழ் மக்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் அனுசரணையாக இருப்பவர்களை எட்டி உதைக்காமல், வேற்றுமைகளுக்குள் ஒற்றுமை கண்டு, அணைத்து, இணைத்துச் செயல்பட ஏற்றுக் கொள்ளும் பக்குவம் தமிழ் மக்களின் எல்லாப் பரப்புகளுக்கும் வர வேண்டும்.

சுமந்திரன் இணைந்திருக்கும் கட்சி ஜனநாயக மரபுகளுக்கு கட்டுப்பட்டது. சுமந்திரனின் வழிமுறைகள், அன்றில் பொறிமுறைகள், பெற்றுக் கொடுக்கக் கூடிய தீர்வுகளை ஒட்டி அபிப்பிராய பேதங்கள் இருந்தால், கட்சி அவற்றை நிராகரிக்கலாம்.

எவ்வளவோ பேரை அரசியல்வாதிகள் மட்டுமல்லர், சமூக ஆர்வலர்கள், நிதி உதவிய தொண்டர்களைக் கூட, 'துரோகிகள்' என்ற முத்திரை குத்தி, சர்வ சாதாரணமாகத் துப்பாக்கி ரவைகள் பலம் வாய்ந்தவை எனத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் போட்டுத் தள்ளி இருக் கிறார்கள். அவர்கள் துரோகிகள் ஆக்கப் பட்டதின் நியதிகளைத் தமிழ் மக்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. இவற்றால் இனம் கண்ட நன்மைகள் என்ன?

இன்றைய தேசியப் பரப்பில் தமிழ்த் தேசியத்துக்கு அப்பால் இருக்கும் அல்லது அதற்கு அனுசரணையான தரப்புகள் கூட, தற்சமய சூழலில் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் தன்னிறைவு நோக்கிப் போக வேண்டிய வழிகளையே உற்று நோக்க வேண்டும், அதற்காகச் சிங்கள மிதவாதிகளோடும், காலிமுகத்திடலின் சிந்தனையாளர்களோடும், முஸ்லிம் மக்களோடும் இணைந்து தேசிய நீரோட்டத்தில் கலக்க வேண்டும் என்று இயங்குகிறார்கள். கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

இவற்றால் தமிழ் தேசியம் என்ற ஜீவநதி தமிழ் தேசியத் தலைவர்களின் இயலாமைகளால் நாட்டின் தேசியத்தின் மகாவலியுடன் கலந்து எந்தச் சமுத்திரத்தைச் சென்றடையும் போகிறது என்ற கேள்விகளும் எழுகின்றன. அவற்றைப் பின்னால் பார்ப்போம்.

(வளரும்)